காலை முரசு

## யாழ்ப்பாணத்தில் மூன்று நாள் காய்ச்சலால் இளைஞர் ஒருவர் சாவு!

(எஸ்.ரகுதீஸ்)

மூன்று நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 05


முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை 03.08.2025 | அதிர்வு 02



# செம்மணியில் நேற்றும் நான்கு எலும்புக்கூடுகள்

## இதுவரை 126 மனித என்புத்தொகுதிகள் அடையாளம்






(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் உள்ள இரண்டு மனிதப் புதைகுழிகளில் இருந்தும் நேற்று சனிக்கிழமை இரண்டு சிறுவர்களின் எலும்புக்கூட்டுத் தொகுதிகள் உட்பட புதிதாக 4 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதே வேளை, ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் நேற்று 5 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் பகுதியில் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல. - 01" மற்றும் "தடயவியல் அகழ்வாய்வுத் தளம்இல.-02" எனநீதிமன்றத்தால் அடையாளப்படுத்தப்பட்ட 04




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.

கட்சியின் அரசியல் குழுவும், அரசியல் தீர்வு சம்பந்தமான விடயங்களைக் கையாள்வதற்கு மத்திய செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட ஏழு பேர் கொண்ட குழுவும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து அந்தக் கூட்டத்தை நடத்தினர்.

அந்தக் கூட்டத்தில் அதிர்ச்சியான செய்தியொன்றை கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் விடுத்தார் என அக்கூட்டத்தில் பங்கு பற்றிய ஒரு பிரதிநிதி தெரிவித்தார்.

ஒரு சில மணி நேரம் தாமதித்திருந்தால் 05



# செம்மணியில் சான்றுப்பொருள்களை காணொளி, ஒளிப்படம் எடுக்கத் தடை

## யாழ். நீதிமன்றத்தால் ஒழுங்குவிதிகள் அறிவிப்பு

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட ஆடைகள் உள்ளிட்ட பிற சான்றுப்பொருள்களைப் பொதுமக்கள் அடையாளம் காணும் வகையில் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01.30 மணியிலிருந்து 05.00 மணி வரை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்போது சான்றுப்பொருள்களைக் காணொளிகள், ஒளிப்படங்கள் எடுக்க நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

பொதுமக்களுக்குச் சான்றுப்பொருள்களைக் காண்பிப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளை தொடர்பான ஒழுங்குவிதிகள் பின்வருமாறு:-

1. மேற்படி, நடவடிக்கையானது ஒரு நீதிமன்ற நடவடிக்கைக்குரிய நடவடிக்கையாகக் காணப்படுவதால் கண்ணியம், அந்த நடவடிக்கையில் பங்கேற்கும் நபர்களால் பேணப்பட வேண்டும்.

2. காணாமல்போன நபர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்த உறவினருக்கே முன்னுரிமை வழங்கப்படும். அவர்கள் தம்முடைய உறவுகள் காணாமல் போனதை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்றினைச் சமர்ப்பிப்பது விரும்பத்தக்கது. ஏனைய நபர்களை அனுமதிப்பது தொடர்பில், முற்படுத்தப்படும் தரவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

3. மேற்படி நடவடிக்கையில் பங்குபற்றும் நபர்களது பெயர், அடையாள அட்டை இலக்கம் (அல்லது கடவுச்சீட்டு இலக்கம் அல்லது சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்), முகவரி என்பன நீதிமன்ற உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்படும்.

4. இருபத்தொரு (21) வயதுக்கு மேற்பட்ட நபர்கள் மாத்திரம், மேற்படி நடவடிக்கையில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்


5. பங்குபற்றும் நபர்கள் மேற்படி நீதிமன்ற நடவடிக்கையையோ அல்லது காண்பிக்கப்படும் பொருள்களையோ ஒலி, ஒளிப்பதிவு செய்யவும், எந்தவொரு இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துவரவும் தடை விதிக்கப்படுகின்றது.

6. மேற்படி நடவடிக்கையில் பங்குபற்றும் காணாமல்போன நபர்களின் உறவினர்கள் சட்டத்தரணி ஒருவருடன் தோன்றவும் நீதிமன்றம் அனுமதி வழங்குகின்றது.

7. பங்குபற்றும் நபர்கள் காண்பிக்கப்படும் சான்றுப்பொருள்களைக் கையாளுவதற்குத் தடை விதிக்கப்படுகின்றது.

8. மேற்படி நடவடிக்கை ஒரு நீதிமன்ற நடவடிக்கையாகக் காணப்படுவதனால், மேற்படி நடவடிக்கைகளை ஒளிப்பதிவு செய்வது தடை செய்யப்படுகின்றது. ஆகவே, இந்த நடவடிக்கை நடைபெறும் வேளையில், சித்துப்பாத்தி இந்து மயான வளாகத்துக்குள் ஊடகவியலாளர்கள் எவரும் ஒளிப்பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேற்படி ஒழுங்குவிதிகளை மீறும் நபர்களுக்கு எதிராக, நீதிமன்றத்தால் உரிய சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அந்தக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நீதிவான் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற வழக்கிலக்கம் BR/433/PC/2025.

நீதிமன்றக் கட்டளை தொடர்பான ஒழுங்குவிதிகள்.

யாழ்ப்பாணம் A9 வீதிக்கு அருகில் அமைந்துள்ள செம்மணிப் பகுதியிலுள்ள, அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேற்கொள்ளப்படும் அகழ்வு நடவடிக்கைகளில் கண்டெடுக்கப்பட்ட உடைகள் மற்றும் பிற பொருட்களை பொதுமக்களுக்குக் காண்பிப்பது தொடர்பில் நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளை தொடர்பான ஒழுங்குவிதிகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| இடம் | :- அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானம் (செம்மணி). |
| காண்பிக்கப்படும் திகதி | :- 2025.08.05 - செவ்வாய்க்கிழமை. |
| நேரம் | :- 13.30 மணியிலிருந்து 17.00 மணி வரை. |

1. மேற்படி நடவடிக்கையானது ஒரு நீதிமன்ற நடவடிக்கையாகக் காணப்படுவதனால், நீதிமன்ற நடவடிக்கைக்குரிய கண்ணியம், அந்நடவடிக்கையில் பங்கேற்கும் நபர்களால் பேணப்பட வேண்டும்.
2. காணாமல் போன நபர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்த உறவினருக்கே முன்னுரிமை வழங்கப்படும். அவர்கள்; தம்முடைய உறவுகள் காணாமல் போனதை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்றினைச் சமர்ப்பிப்பது விரும்பத்தக்கது. ஏனைய நபர்களை அனுமதிப்பது தொடர்பில், முற்படுத்தப்படும் தரவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.
3. மேற்படி நடவடிக்கையில் பங்குபற்றும் நபர்களது பெயர், அடையாள அட்டை இலக்கம் (அல்லது கடவுச்சீட்டு இலக்கம் அல்லது சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்), முகவரி என்பன நீதிமன்ற உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்படும்.
4. இருபத்தொரு (21) வயதிற்கு மேற்பட்ட நபர்கள் மாத்திரம், மேற்படி நடவடிக்கையில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.
5. பங்குபற்றும் நபர்கள்; மேற்படி நீதிமன்ற நடவடிக்கையையோ அல்லது காண்பிக்கப்படும் பொருட்களையோ, ஒலி, ஒளிப்பதிவு செய்யவும், எந்தவொரு இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துவரவும் தடை விதிக்கப்படுகின்றது.
6. மேற்படி நடவடிக்கையில் பங்குபற்றும் காணாமல் போன நபர்களின் உறவினர்கள் சட்டத்தரணி ஒருவருடன் தோன்றவும் நீதிமன்றம் அனுமதி வழங்குகின்றது.
7. பங்குபற்றும் நபர்கள்; காண்பிக்கப்படும் சான்றுப்பொருட்களை கையாளுவதற்குத் தடை விதிக்கப்படுகின்றது.
8. மேற்படி நடவடிக்கை ஒரு நீதிமன்ற நடவடிக்கையாகக் காணப்படுவதனால், மேற்படி நடவடிக்கைகளை ஒளிப்பதிவு செய்வது தடை செய்யப்படுகின்றது. ஆகவே, இந்நடவடிக்கை நடைபெறும் வேளையில், அரியாலை சித்துப்பாத்தி இந்து மயான வளாகத்திற்குள் ஊடகவியலாளர்கள் எவரும் ஒளிப்பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேற்படி ஒழுங்குவிதிகளை மீறும் நபர்களுக்கு எதிராக, நீதிமன்றினால் உரிய சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நீதிவான்,
யாழ்ப்பாணம்.
2025.08.02.

A.A.ANANDARAJAH
Magistrate
Jaffna

## செம்மணி மனிதப் புதைகுழியில்

# மீட்கப்பட்ட தடயப்பொருள்களை அடையாளம் காட்ட ஒத்துழையுங்கள்

## மக்களிடம் சிறீதரன் எம்.பி. கோரிக்கை



செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகளில் இதுவரை மீட்கப்பட்டுள்ள தடயப் பொருள்கள் பொதுமக்களால் அடையாளப்படுத்தப்படுமாக இருந்தால், அவற்றை அடிப்படையாகக்கொண்டு உண்மைகளைக் கண்டறிவதற்கான விசாரணைகளைக் கோர முடியும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எம்.பி. சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் விடுக்கப்பட்டுள்ள கட்டளையை மேற்கோள் காட்டி கருத்து தெரிவிக்கும் போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

“செம்மணியில் மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் பின்னணியிலுள்ள இனப்படுகொலைச் சம்பவங்களை எண்பிப்பதற்கு, அங்கு நடைபெற்றுவரும் அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்ட தடயப் பொருட்கள் உரியவர்களின் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட வேண்டும்.

ஆகவே, தடயப்பொருள்களை இனங்காட்ட வேண்டியதன் அவசியம் உணர்ந்து, தங்களின் உறவுகளும் செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் 1.30 மணி முதல் 5.00 மணி வரை யாழ்ப்பாணம் சித்துப்பாத்தி இந்து மயானத்தருகில் காட்சிப்படுத்தப்படும் தடயப்பொருள்களை அடையாளம் காட்ட வருகைதந்து, இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணைக்கான கோரிக்கைக்கு வலுச்சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.” – என்றார்.

# ஒழுங்கையில் நித்திரை கொண்டவர் மீது டிப்பர் ஏறியதில் இளைஞன் உயிரிழப்பு




(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு, பட்டிக்குடியிருப்பு பகுதியில் ஒழுங்கையில் உறங்கியவர் மீது டிப்பர் வாகனம் ஏறிச் சென்றதில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியா வடக்கு, பட்டிக்குடியிருப்பு பகுதியில் உள்ள தனது வீட்டு ஒழுங்கையில் படுத்து உறங்கிய இளைஞனை கவனிக்காத நிலையில் டிப்பர் வாகனத்தைச் செலுத்தி வந்த மேற்படி இளைஞனின் மைத்துனர் வீடொன்றில் சல்லிக் கல்லினை இறக்கிவிட்டு வாகனத்தை திருப்பியுள்ளார்.

இரவு நேரமாகையால் அந்த ஒழுங்கையில் இளைஞன் படுத்திருந்ததை அறிந்திருக்காத நிலையில் வாகனம் இளைஞன் மீது ஏறியுள்ளது. நேற்று காலையிலேயே அந்த இளைஞன் டிப்பர் வாகனம் ஏறியதில் மரணமடைந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

மேற்படி இளைஞன் வாகனத்தில் நசுங்கிய நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதை அறிந்த மைத்துனரான வாகனச் சாரதி நெடுங்கேணிப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**செம்மணியில் நேற்றும்...**

மனிதப் புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மனிதப் புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 37 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டப் பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று 28 ஆவது நாளாக அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது. அதன்போது, இரண்டு சிறுவர்களின் எலும்புக்கூட்டுத் தொகுதிகள் உட்பட புதிதாக 4 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கமைய இதுவரையில் 126 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேவேளை, ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் நேற்று 5 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய இதுவரையில் 117 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
















# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதிவைத் தேர்தல் ஆணையம் நிறுத்தி இருக்கும், ரத்து செய்திருக்கும். அது நடந்திருந்தால் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள் எல்லோரும் பதவி இழந்து இருப்பார்கள் என்ற பீடிகையோடு விடயத்தை சுமந்திரன் நேற்றைய கூட்டத்தில் வெளிப்படுத்தினார் என அந்த உறுப்பினர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சி தன்னுடைய வருடாந்தக் கணக்கு வழக்கு அறிக்கையை உரிய சமயத்தில் சமர்ப்பிக்கத் தவறியதனால் அதன் பதிவை தேர்தல் ஆணையம் ரத்துச் செய்திருப்பது தெரிந்த விடயம்தான்.

அதே கதி தமிழரசுக் கட்சிக்கும் நேர இருந்தது. கடைசி மணித்துளியில் அது தப்பிப் பிழைத்திருக்கின்றது.

மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கடந்த வருடத்திற்கான கட்சியின் கணக்காய்வு செய்யப்பட்ட வரவு – செலவு அறிக்கையை தமிழரசுக் கட்சி சமர்ப்பிக்கவில்லை. அதற்கான இரண்டு இறுதி நினைவூட்டல் கடிதங்கள் கட்சிக்கு அனுப்பப்பட்ட நிலையில், கட்சியின் தலைவரும், பொதுச் செயலாளரும் அவற்றை சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் கோரி தனித்தனியாக தேர்தல் ஆணையத்திடம் விண்ணப்பித்திருந்தனர். அதை ஏற்றுக் கொண்ட தேர்தல் ஆணையம் இறுதி காலக்கெடுவாக ஜுலை 31 ஆம் திகதியைக் குறிப்பிட்டு அதற்கு முன்னர் கணக்கறிக்கை கிடைக்காமல் விட்டால் கட்சியின் பதிவு ரத்தாகும் என்று கடந்த 17ஆம் தேதி இறுதி எச்சரிக்கை கடிதத்தை அனுப்பி இருந்தது.

ஆயினும் அதன் பின்னரும் கூட கட்சியின் பொருளாளர் கனகசபாபதி அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவே இல்லை என்று கூறப்படுகிறது.

கடந்த மாதம் முழுவதும் வெளிநாட்டில் இருந்த கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் கடந்த 25 ஆம் திகதியே நாடு திரும்பியிருந்தார்.

"இன்று 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கையை தேர்தல் ஆணையகத்துக்கு தமிழரசுக் கட்சி சமர்ப்பிக்காவிட்டால் தமிழரசுக் கட்சியின் பதிவு நாளை ரத்தாவது தவிர்க்க முடியாததாகும்" என்ற எச்சரிக்கையை தேர்தல் ஆணைய அலுவலகத்தில் இருந்து ஒரு வட்டாரம் அவருக்குச் சுட்டி காட்டி இருக்கின்றது.

அதன் பின்னரும் – அந்த அவசரத்திலும் – கட்சியின் பொருளாளர் உரிய நடவடிக்கை எடுக்காமல் முன்னைய காலம் போல உதாசீனமாக நடந்து கொண்டார் என்று தெரிகிறது.

கடைசி நேரத்தில் – கடைசி மணித்துளியில் – 31ஆம் தேதி மதியம் பொதுச் செயலாளரின் வழிகாட்டலில் கட்சியின் வலி வடக்கு பிரதேச சபையின் தலைவர் சுகிர்தன் பகீரதப் பிரயத்தன முயற்சி எடுத்து அந்த கணக்கறிக்கையை தேர்தல் ஆணையத்துக்கு உரிய முறையில் கிடைக்கப் பண்ணுவதை உறுதிப்படுத்தியமையால் கட்சி தப்பி பிழைத்தது என்ற விவரத்தை சுமந்திரன் விரிவாகக் கட்சி உறுப்பினர்களுக்கு நேற்றைய கூட்டத்தில் தெரியப்படுத்தினார்.

இந்த விடயத்தில் கணக்காய்வு நிறுவனத்தின் யாழ் கிளை அலுவலகம், கொழும்பு தலைமையகம் ஆகியவற்றைக் கண்டுபிடித்து, அவற்றுடன் மல்லுக்கட்டி, விடயத்தை ஒப்பேற்றும் முயற்சியில் கட்சிப் பிரமுகரும் சட்டத்தரணியுமான சயந்தனும் தீவிரமாகக் கருமமாற்றினர் எனத் தெரிகின்றது.

கணக்காய்வு செய்யப்பட்ட ஆக ஒரு பக்க கணக்கறிக்கையை உரிய சமயத்தில் சமர்ப்பிக்காமல் இழுத்தடிப்பதன் மூலம் கட்சியின் பதிவை ரத்து செய்ய வைத்து, அதன் மூலம் கட்சியின் தற்போதைய நிர்வாகிகளை வேண்டுமென்றே அரசியலில் அதலபாதாளத்துக்குள் தள்ள சதி முயற்சி எடுக்கப்பட்டதாக இப்போது விடயம் தெரிய வருகிறது.

இது குறித்து நேற்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் அறிந்து கொண்டேன்.

எனினும் இவ்விடயம் தொடர்பாக என்னுடைய கேள்விகளுக்கு உரிய பதிலை செயலாளர் சுமந்திரன் தரவில்லை. நேற்றைய கூட்டத்தில் பங்கு பற்றிய வேறு தரப்பினர் மூலம் நான் அறிந்து கொண்டு, நான் குறிப்பிட்டுக் கேட்ட விடயங்கள் உண்மை என்பதை சுமந்திரன் மறுக்கவில்லை.

கடைசி நேரத்தில் மிகச் சிறப்பாக செயல்பட்டு கட்சியைக் காப்பாற்றிய சுகிர்தனுக்கு விசேட நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நேற்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது என்ற செய்தியையும் அவர் ஒப்புக்கொண்டார்.

ஆயினும், அவரையும் கட்சியின் தலைவர் சிவஞானத்தையும் நீங்காப் பழியில் மாட்டி விடும் எத்தனம் கட்சியின் சக பிரமுகர்களால் இந்த மார்க்கத்தில் முன்னெடுக்கப்பட்டதா என்ற என் கேள்விக்கு அவர் நேரடியாகப் பதில் அளிக்க மறுத்து விட்டார்.

ஆயினும், சுமார் ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் சுமந்திரனை நோக்கி நான் பகிரங்கமாக எழுப்பிய ஒரு வினாவை இவ்விடயத்தை ஒட்டி நேற்று அவருக்கு நினைவூட்டினேன்.

அது, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரனிடம் பகிரங்கமாக கேள்வி எழுப்பும் பொதுக் கூட்டம். அந்தக் கூட்டத்தில் அவரிடம் கேள்விக் கணைகளைத் தொடுக்கும் பொறுப்பு எனக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அச்சமயத்தில் நல்லாட்சி அரசோடு இணைந்து தீர்வு முயற்சியில் தமிழரசுக் கட்சி ஈடுபட்டிருந்த காலம். என் நினைவு சரி என்றால், 'இன்னமும் நீங்கள் ரணில் விக்கிரமசிங்கவை நம்புகிறீர்களா?' என்று வினாவோடு எனது கேள்விக் கணைகள் தொடர்ந்தன.

அச்சமயத்தில் தமிழரசு கட்சியின் தேசிய மாநாடுகளில் கட்சியின் பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பிப்பதில்லை, இது பெரும் முறைகேடு இல்லையா என்று நான் அப்பட்டமாக – பகிரங்கமாக – சுமந்திரனை நோக்கிக் கேள்வி எழுப்பியிருந்தேன்.

என் கேள்வி அப்போது சுமந்திரனை சினப்படுத்தியது என்பது அவரது பதிலிலிருந்து தெரிந்தது. நான் சுமத்திய குற்றச்சாட்டு முற்றிலும் தவறு என்ற பாணியில் பதிலளித்து அவர் தப்பிக் கொண்டார்.

ஆனால் இன்று வரையும் அதுதான் நிலைமை. இப்போது அவர் பொதுச் செயலாளராக இருக்கும்போது வீண் அபவாத பழி அவர் மீதும், கட்சித் தலைவர் மீதும் விழக்கூடியதாக இந்தக் காய் நகர்த்தல் முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றது.

தேர்தல் ஆணையம் இறுதி எச்சரிக்கை கொடுத்து, கட்சியின் பதிவு ரத்தாகும் என்று காலக்கெடுவும் விதித்த பின்னரும், கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கையை தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பாமல் கட்சியின் பொருளாளர் மெத்தனமாக இருந்திருக்கின்றார் என்ற விடயம் மிக மோசமானது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருந்து உள்ளூராட்சி உறுப்பினர்கள் வரை அனைவரின் பதவிக்கும் ஆப்பு வைக்கும் நடவடிக்கையாக இது மாறி இருக்கும் ஆபத்து இருந்தது.

ஏதோ 31-ஆம் திகதி அலுவலகம் மூடுவதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் கணக்கறிக்கை கையளிக்கப்பட்டதால், அதனை தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டு நெருக்கடி நிலைமை சமாளிக்கப்பட்டு இருக்கின்றது.

கட்சியின் தலைமையகம் வயோதிபர் மடமாக இருந்தால் இப்படியான ஆபத்துக்கள் தவிர்க்க முடியாதவையாகத்தான் இருக்கும்.

தந்தை செல்வா கூறியமை போல, தமிழரை அல்ல, தமிழரசுக் கட்சியைத் தான் முதலில் கடவுள் காப்பாற்ற வேண்டும்.

அந்த நிலைமையை மாற்றுவதானால் முதலில் கட்சி நிர்வாகிகளை ஒழுங்கமைத்துக் கொள்ளுங்கள். இது என் பணிவான ஆலோசனை.

---

**மூன்று நாள்...**

இவ்வாறு உயிரிழந்தவர் யாழ்ப்பாணம், நாவற்குழி தெற்கு, கைதடியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தேனுசன் (வயது 29) என்பவராவார்.

மேற்படி இளைஞருக்கு கடந்த 29, 30, 31ஆம் திகதி ஆகிய மூன்று நாள்கள் காய்ச்சல் ஏற்பட்டதால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். பின்னர் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை நெஞ்சுக் குத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை சாவகச்சேரிப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோகம்

நீண்ட காலம் தீர்க்கப்படாமல் இழுபடும் இனப்பிரச்சினை, அதனால் எழுந்த முரண்பாடுகள், யுத்தம், பேரழிவுகள் போன்றவை காரணமாக மில்லியன் கணக்கான இலங்கையர்கள் புலம்பெயர்ந்துள்ளனர். வெறுமனே தமிழர்கள் என்று இல்லாமல், இலங்கையில் அனைத்து இனத்தவர்களுமே பெரும் எண்ணிக்கையில் புலம்பெயர் நாடுகளில் குடியேறித் தங்களை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அந்தந்த நாடுகள் அவர்களை அரவணைத்துக் கொள்ள, அவர்கள் அங்கு கௌரவமான - வசதியான - திருப்தியான - சுபீட்சமான - வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் தங்கள் குடும்பங்களை நிலைநிறுத்திக் கொள்ளவும் தாராளமாக வாய்ப்புகள் கிடைத்தன.

இதனை அவதானித்த நாட்டில் உள்ள ஏனய மக்களும் புலம்பெயர் போக்கில் ஆசை கொள்ளத் தொடங்கினர். முதலில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைத் தேடுவது, வெளிநாட்டில் உழைத்து விட்டு, முடியுமானால் அந்தந்த நாடுகளில் நிரந்தரமாகத் தங்கி விடுவது மேலானது - நல்லது - என்று எண்ணி பலரும் அந்த வழியில் முயற்சிக்கத் தொடங்கினார்கள்.

இனப் பிரச்சினையால் எழுந்த யுத்தம் முடிவடைந்த பின்னரும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு எட்டப்படவில்லை. போதாக்குறைக்கு அதனைத் தொடர்ந்து நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கி, நாட்டில் உள்ள மக்கள் பெரும் இக்கட்டை எதிர்கொள்ளும் அவல நிலையும் நீடிக்கின்றது.

இவையெல்லாம் மக்களை வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் வசதிகளை நோக்கி வெளிநாடுகளுக்குப் புலம்பெயரத் தூண்டி வருகின்றன.

மக்களின் இந்த அதீத ஆசையை - விருப்பை - எதிர்பார்ப்பை - மூலதனமாக்கி பணத்தைச் சூறையாடும் ஒரு தொழில் - ஒரு கும்பல் - இந்த நாட்டில் உருவாகி இருக்கின்றது.

சாதாரண பொதுமக்கள் இந்த நாட்டில் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகும் குற்றங்களில் முக்கியமானதாகத் திகழ்வது வெளிநாட்டு வேலை வாய்ப்பு பயணங்களுக்கு ஏற்பாடு செய்து தருகிறோம் என்று நிதியைச் சூறையாடும் கும்பல்களின் செயல்பாடுகள்தான்.

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரையான ஏழு மாதக் காலப்பகுதிக்குள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி தொடர்பில் 2,620 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த ஏழு மாதங்களில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்ட 36 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் இருபது கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மீள பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி தொடர்பில் 4,658 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

எனவே இவ்வாறான மோசடிகள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் தகவல் கிடைத்தால் 1989 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஆயினும், அக்கரை பச்சை என்ற ஆவலில் அலையும் நமது சமூகம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பித்தில் மூழ்கிக் கிடப்பதால் இந்த ஏமாற்றுதல்களும் தொடரவே செய்யும்.




# வல்வைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு

வல்வைப் படுகொலை 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் தமிழ்த் தேசிய பேரவையினரால் முன்னெடுக்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு இதே நாளில் இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்ட தமிழர்களின் நினைவாக வல்வெட்டித்துறை றேவடி கடற்கரை பகுதியில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

வல்வைப் படுகொலையின் 36 ஆவது ஆண்டு நிழனவேந்தல் நிகழ்வில் நினைவு சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செய்யப்பட்டு நினைவுகூறப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய பேரவையை சேர்ந்த செல்வராஜா கஜேந்திரன், வல்வெட்டித்துறை பிரதி தவிசாளர், நகரசபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய பேரவை உறுப்பினர்கள், தமிழ்த்தேசிய ஆர்வலர்கள், பிரதேச மக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.








# நீதவான் திலின கமகே இடைநிறுத்தப்பட்டார்

மொரட்டுவை நீதவானாக பணியாற்றிய திலின கமகேவின் பணிகளை இடைநிறுத்த நீதிசேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவருக்கு எதிரான தவறான நடத்தை குற்றச்சாட்டுகள் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட விசாரணையையடுத்து, இந்த இடைநீக்கம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த குற்றச்சாட்டு குறித்து 21 நாள்களுக்குள் பதிலளிக்குமாறு கோரி ஆணைக்குழு நேற்று முன்தினம் எழுத்துப்பூர்வமாக நீதவானுக்கு அறிவித்தது.

முன்னதாக, சட்டவிரோதமான யானை வைத்திருந்தமை தொடர்பில் அவருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த ஜூன் மாதம், நீதிச்சேவை ஆணைக்குழு, திலின கமகேவுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

மோசடியாகப் பெறப்பட்ட அனுமதியைப் பயன்படுத்தி 'சகுரா' என்ற குட்டி யானையை வைத்திருந்ததன் மூலம் பொதுச்சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டி, சட்டமா அதிபர் அவருக்கு எதிராக 25 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடர்ந்தார்.

யானை குட்டியை சட்டவிரோதமாக வைத்திருந்தது தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்தது.

இந்தநிலையில், 2015 ஆம் ஆண்டு மே மாதம், குறித்த யானை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.




# சாதனை வருமானத்தை ஈட்டிய இலங்கை சுங்கத் திணைக்களம்

இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில், இலங்கை சுங்கத் திணைக்களம் 1,227 பில்லியன் ரூபா சாதனை வருமானத்தை ஈட்டியுள்ளது.

இதன்படி கடந்த மாதத்தில் அதிகளவான வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக, இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இந்த வருமானத்தில் பெரும் பகுதி வாகன இறக்குமதி மூலம் கிடைத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை பொலிஸ் சேவைக்கு தனியாக சம்பளக் கட்டமைப்பு




பொலிஸ் சேவைக்கு தனியாக சம்பள கட்டமைப்பு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி அடுத்த வருடத்திற்கான வரவு – செலவு திட்டத்தில் யோசனை சமர்ப்பிக்கப்படவுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சின் ஆலோசனைக்குழுவில் அமைச்சர் ஆனந்த விஜேபால இதனை கூறினார்.

தற்போது பணியிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் செயல் திறனை அதிகரிப்பதற்காக பயிற்சி திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பொலிஸ் சேவையிலுள்ள சிக்கல்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தவறான விடயங்களுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சட்டவிரோத செயல்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்கள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால ஆலோசனை வழங்கியுள்ளார்.

# இலங்கை வந்தார் ஹிருத்திக் ரோஷன்






இந்திய சினிமா நட்சத்திரமான ஹிருத்திக் ரோஷன் இலங்கைக்கு வருகைத் தந்துள்ளார்.

சிட்டி ஒப் ட்ரீம்ஸ் நட்சத்திர விடுதியின் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக அவர் இலங்கை வந்துள்ளார்.

முன்னதாக இந்நிகழ்வுக்கு பொலிவுட் நட்சத்திரமான ஷாருக்கான் வருகை தரவிருந்த நிலையில், படப்பிடிப்பின் போது ஏற்பட்ட காயத்துக்கு அமெரிக்காவில் சிகிச்சை பெறுவதால் அவரது வருகை ரத்து செய்யப்பட்டிருந்தது.

இதனால் அவருக்குப் பதிலாக மற்றுமொரு பொலிவுட் நட்சத்திரமான ஹிருத்திக் ரோஷன் வருகை தருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2000 மெகாவோட் சூரியமின் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானம்

2000 மெகாவோட் சூரியமின் உற்பத்தி திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மகாவலி பிராந்தியத்தின் சில பிரதேசங்களை மையப்படுத்தி இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வலுசக்தி அமைச்சு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தவுள்ளன.

முதலீட்டாளர்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.






# பயங்கரவாதிகளை இந்தியா அழித்ததை காங்கிரஸால் ஜீரணிக்க முடியவில்லை

## பிரதமர் மோடி தெரிவிப்பு




பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை இந்தியா அழித்ததை காங்கிரஸ் கட்சியாலும், அதன் ஆதரவாளர்களாலும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை என்று பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளார்.

உத்தரப் பிரதேசத்தின் வாராணசியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு நான் வாராணசி வருவது இதுவே முதல்முறை.

பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் 26 பேர் இரக்கமின்றி கொல்லப்பட்டபோது எனது இதயம் சோகத்தால் நிறைந்தது. எனது மகள்களின் குங்கும் அழிக்கப்பட்டதற்கு பழிவாங்க நான் சபதம் மேற்கொண்டேன். அந்த சபதம் சிவபெருமானின் ஆசியுடன் நிறைவேறி உள்ளது. ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியை சிவபெருமானின் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

விவசாயிகளின் நலனுக்காக எங்கள் அரசு அயராது பாடுபட்டு வருகிறது. முந்தைய அரசுகள் வாக்குறுதி அளித்த ஒரு திட்டத்தைக்கூட நிறைவேற்றவில்லை. ஆனால், பா.ஜ.க. அரசு தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறது. பி.எம். கிசான் சம்மான் திட்டம், பா.ஜ.க. அரசின் விருப்பம் மற்றும் நோக்கங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. காங்கிரஸ், சமாஜ்வாதி போன்ற வளர்ச்சிக்கு எதிரான கட்சிகள், மக்களை எல்லா விதத்திலும் தவறாக வழிநடத்த முயல்கின்றன. நம்பிக்கையற்ற எதிர்க்கட்சிகள் இத்தகைய பொய்யான நம்பிக்கைகளால்தான் வாழ்கின்றன என்பது துரதிருஷ்டம்.

அநீதியும் பயங்கரவாதமும் நிகழும்போது சிவபெருமான் ருத்ர ரூபத்தை எடுக்கிறார். ஒபரேஷன் சிந்தூரின்போது உலகம் இந்தியாவின் ருத்ர முகத்தைக் கண்டது. துரதிருஷ்டவசமாக ஒபரேஷன் சிந்தூரின் வெற்றி சிலருக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக, பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை இந்தியா அழித்ததை காங்கிரஸ் கட்சி, அதன் ஆதரவாளர்களால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

பாகிஸ்தான் ஆழ்ந்த வேதனையில் உள்ளது என்பது அனைவருக்கும் புரிகிறது. ஆனால், பாகிஸ்தான் அனுபவிக்கும் வேதனையை இங்குள்ள காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாதி கட்சிகளாலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நமது படைகளின் வீரத்தை காங்கிரஸ் தொடர்ந்து அவமதித்து வருகிறது. ஒபரேஷன் சிந்தூர் ஒரு வேடிக்கை என காங்கிரஸ் கூறுகிறது.” என தெரிவித்தார்.

# 2024 மக்களவைத் தேர்தலில் மோசடி; ஆதாரம் உள்ளது என்கிறார் ராகுல்



கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் மோசடி நடந்துள்ளது என குற்றம் சாட்டியுள்ள ராகுல் காந்தி, அதற்கான ஆதாரம் தங்களிடம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் சட்ட மாநாட்டில் உரையாற்றிய ராகுல் காந்தி,

“மக்களவைத் தேர்தலில் மோசடி செய்ய முடியும். 2024 மக்களவைத் தேர்தலிலும் மோசடி நடந்துள்ளது. இதை நிரூபிக்க தரவுகளும் ஆவணங்களும் இப்போது உள்ளன. இதை நாங்கள் நிரூபிக்கப் போகிறோம்.

ஒரு மக்களவைத் தொகுதியின் வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்தபோது, மொத்தமுள்ள 6.5 லட்சம் வாக்காளர்களில் 1.5 லட்சம் வாக்காளர்கள் போலியானவர்கள் என்பதை நாங்கள் கண்டறிந்தோம். இந்த மோசடியால்தான் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது. அவர்கள் 15-20 தொகுதிகள் குறைவாகப் பெற்றிருந்தால், அவர் (பிரதமர் நரேந்திர மோடி) பிரதமராகி இருக்க மாட்டார்.

இந்தியாவில் தேர்தல் ஆணையம் இறந்துவிட்டது. சமீப காலமாக தேர்தல் முறை பற்றி நான் பேசி வருகிறேன். 2014 முதல் ஏதோ தவறு இருப்பதாக எனக்கு எப்போதும் ஒரு சந்தேகம் இருந்தது. குஜராத் சட்டப்பேரவைத் தேர்தல் பற்றி எனக்கு ஏற்கனவே சந்தேகம் இருந்தது.

ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத் மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு (மக்களவையில்) ஒரு இடம்கூட கிடைக்கவில்லை. இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால், இது குறித்து நாங்கள் பேசும்போதெல்லாம், ஆதாரம் எங்கே என்று மக்கள் கேட்டார்கள்.

அப்போதுதான், மகாராஷ்டிராவில் சில விஷயங்கள் நடந்தன. மக்களவைத் தேர்தலில் நாம் அங்கு வெற்றி பெற்றோம். 4 மாதத்துக்குப் பிறகு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் நாம் தோற்கவில்லை மாறாக அழிக்கப்பட்டோம். எனவே, தேர்தல் முறைகேடுகளை நாங்கள் தீவிரமாகத் தேடத் தொடங்கினோம்.

மகாராஷ்டிராவில் மக்களவைத் தேர்தலுக்கும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கும் இடையே 1 கோடி புதிய வாக்காளர்கள் வந்திருப்பதை நாங்கள் கண்டறிந்தோம். அந்த வாக்குகளில் பெரும் பகுதி பா.ஜ.கவுக்குச் சென்றுள்ளது. இதற்கான ஆதாரம் இப்போது எங்களிடம் உள்ளது. சந்தேகத்துக்கு இடமின்றி இதைக் கூறுகிறேன்.” என தெரிவித்தார்.



# பிரபல திரைப்பட நடிகர் மதன்பாபு காலமானார்

தென்னிந்திய குணச்சித்திர நடிகரான மதன்பாபு தனது 71 ஆவது வயதில் நேற்று காலமானார்.

புற்று நோய் பாதிப்பால் சிகிச்சை பெற்று வந்தநிலையில், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை உயிரிழுந்தார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கிருஸ்ணமூர்த்தி என்ற இயற் பெயரைக் கொண்ட இவர் தமிழ், மலையாளம்,தெலுங்கும் உள்ளிட்ட மொழிகளில் 100 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளதுடன், தனது தனித்துவமான சிரிப்பின் மூலம் ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தார்.

நீங்கள் கேட்டவை, வானமே எல்லை, தேவர் மகன், ஜாதி மல்லி, உழைப்பாளி, திருடா திருடா, மகளிர் மட்டும், சதிலீலாவதி, பூவே உனக்காக, தெனாலி, ஃபிரெண்ட்ஸ், பம்மல் கே சம்பந்தம், கிரி, மாப்பிள்ளை உள்ளிட்ட பல படங்களில் இவரது நகைச்சுவைக் காட்சிகள் இன்றளவும் ரசிக்கப்பட்டு வருகின்றன.

மதன்பாபுவின் உடல் அஞ்சலிக்காக சென்னை அடையாறில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.









# ஒலியைப் போல் 10 மடங்கு வேகத்தில பாயக்கூடிய 'ஆரெஷ்னிக்' ஏவுகணை பெலாரஸில் நிறுத்தப்படும்

## ரஷ்ய ஜனாதிபதி புடின் அதிரடி அறிவிப்பு






ஒலியைப் போல் 10 மடங்கு வேகத்தில் பாயக்கூடிய தமது புதிய வகை ஏவுகணையான 'ஆரெஷ்னிக்', அண்டை நாடான பெலாரஸில் நிலைநிறுத்தப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பு மேற்குலகை அச்சமடைய வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா சென்றுள்ள பெலாரஸ் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகஷென்கோவுடன் செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் நகரில் செய்தியாளர்களை வெள்ளிக்கிழமை சந்தித்தபோது புடின் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

"ஆரெஷ்னிக் ஏவுகணைகள் இராணுவப் பணியில் முழுமையாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் பிற்பகுதியில் அந்த ஏவுகணைகளை பெலாரஸிலும் நிலைநிறுத்த திட்டமிட்டுள்ளோம்.

அமெரிக்காவும் பிரிட்டனும் வழங்கிய ஏவுகணைகளை ரஷ்யா மீது வீச அந்த நாடுகள் உக்ரைனுக்கு கடந்த ஆண்டு இறுதியில் அனுமதி அளித்தன. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உக்ரைனின் நீப்ரோ நகரில் ஆரெஷ்னிக் ஏவுகணையை ரஷ்யா கடந்த மாதம் வீசியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் தாக்கியதால் அது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையாக இருக்கலாம் என்று முதலில் கருதப்பட்டது. ஆனால், அது புதிய வகை நடுத்தர தொலைவு ஏவுகணை எனவும், உலகின் எந்த வான்பாதுகாப்பு தளவாடத்தாலும் இடைமறிக்க முடியாத அளவுக்கு ஒலியைப் போல் 10 மடங்குக்கும் மேலான வேகத்தில் அது பாயும்." என்றார்.

மேலும், இடைமறித்து அழிக்க முடியாத அந்த ஏவுகணைகள் உக்ரைன் போரின் போக்கையும், ரஷ்யாவுக்கும் மேலை நாடுகளுக்கும் இடையிலான சமநிலையையும் மாற்றும் என்று அஞ்சப்பட்டது. ஆனால், அந்த வகை ஏவுகணைகள் மிக சொற்பமாகவே தயாரிக்கப்பட்டுள்ளதால் அவை போரில் மிகப் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தாது என்று மேற்கத்திய பாதுகாப்பு நிபுணர்கள் கூறியிருந்தனர்.

இந்த நிலையில், ஆரெஷ்னிக் ஏவுகணை அதிக எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்டு, இராணுவப் பணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக புடின் தற்போது அறிவித்துள்ளமை மேற்குலகை அச்சமடைய வைத்துள்ளது.

# ட்ரம்பின் உயிருக்கு ஆபத்து; சர்ச்சைக் காணொலி வெளியீடு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பனின் உயிருக்கு ஒகஸ்ட் மாதத்தில் ஆபத்து என்ற கணிப்புடன் சிம்ப்சன் காணொலி அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் கடந்த 1989 ஆம் ஆண்டு தி சிம்ப்சன்ஸ் என்ற கார்டூன் தொடர் வெளியாகி வருகிறது.

இந்த கார்டூன் தொடர் எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்வுகளை துல்லியமாக கணிக்கும் எனவும் இந்த தொடரில் வந்துள்ள சில காட்சிகள் நடந்துள்ளன



என கூறப்படுகிறது.

மேலும், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் போன்ற தோற்றமுள்ள ஒரு நபர் ஆகஸ்ட் மாதத்தில் அதாவது இந்த மாதத்தில் உயிரிழப்பது போன்ற சிம்ப்சன் கார்டூன் காணொலி இணையத்தில் பகிரப்பட்டு வருகிறது.

கடுமையான மார்பு நோயால் பாதிக்கப்பட்டு ஜனாதிபதி ஒகஸ்ட் 2025 இல் இறப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது என ஒலிக்கும் பின்னணி குரலுடன் அந்த காணொலி ஆரம்பமாகிறது.

இந்நிலையில், தற்போது சிம்ப்சன் காணொளி பகிரப்பட்டு வருவதுடன் நெட்டிசன்கள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் மதுபானசாலையில் துப்பாக்கிச்சூடு: நால்வர் உயிரிழப்பு

அமெரிக்காவில் உள்ள மதுபான சாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிதாரி தப்பியோடிய நிலையில், தேடுதல் நடவடிக்கையை அந்நாட்டுக் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அமெரிக்காவின் மொன்டானா பகுதியில் உள்ள மதுபானசாலை ஒன்றில் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் காயமடைந்த பலர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது.

# நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையில் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துவருவதாக சுவாச நோய்களுடன் தொடர்புடைய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நுரையீரல் புற்றுநோய்க்கு புகைப்பிடித்தல் முக்கிய காரணியாக இருக்கின்ற போதிலும் இலங்கையில் புகைப்பிடித்தல் பழக்கமுடைய பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளதாகவும் வெலிசற தேசிய சுவாச நோய் வைத்தியசாலையின் நிபுணர் வைத்தியர் தமித் ரோட்ரிகோ தெரிவித்துள்ளார்.

காற்று மாசடைதல் காரணமாகவே பெண்களிடையே நுரையீரல் புற்றுநோய் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆசியாவில் இந்தியா, சீன உள்ளிட்ட நாடுகளின் பிரதான நகரங்களை அண்மித்த பகுதிகளில் காற்று மாசடைதல்



அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மரபணு காரணிகளினாலும் நுரையீரல் புற்றுநோய் ஏற்படலாம் எனவும் வெலிசற தேசிய சுவாச நோய் வைத்தியசாலையின் நிபுணர் வைத்தியர் தமித் ரோட்ரிகோ தெரிவித்துள்ளார்.














# சம்மாந்துறையில் பாதை கீழிறங்கியதால் கனரக வாகனம் ஒன்று குடை சாய்ந்தது!

(றிபாஸ்)

சம்மாந்துறை நெய்னாகாடு திராவோடை வீதியில் திடீரென பாதை கீழிறங்கியதால் கனரக வாகனம் ஒன்று குடை சாய்ந்துள்ளது. எனினும் உயிர் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை.

இச்சம்பவம் நேற்று இரவு 7 மணி அளவில் இடம்பெற்றுள்ளது. சம்மாந்துறை நெய்னாகாடு பிரதேசத்திலிருந்து இரத்தினபுரியை நோக்கி அரிசி ஏற்றி சென்ற கனரக வாகனம் நெய்னாகாடு பிரதான பாலத்திற்கு அருகிலுள்ள திராவோடை வீதியில் பாதை சேதமடைந்தமையினால் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது. எனினும், சாரதிக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என தெரியவருகிறது.

இவ்வாறான விபத்து சம்பவங்கள் ஏற்கனவே பதிவாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.










# மூன்று பிரான்ஸ் சுற்றுலாப் பயணிகள் கடலோரக் காவல்படையினரால் மீட்பு



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

திருகோணமலை நிலாவெளி உள்ள கோபாலபுரம் கடற்கரையில் நீந்திக் கொண்டிருந்த போது அலையில் சிக்கி அனர்த்தத்திற்கு உட்பட்ட மூன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடலோர காவல்படையின் உயிர் காக்கும் குழுவினரால் கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளனர்.

கோபாலபுரம் கடற்கரையில் நீந்திக் கொண்டிருந்த போது அலையில் அடித்து செல்லப்பட்ட மூன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கடற்கரையில் உயிர் காக்கும் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள கடலோர காவல்படையின் உயிர் காக்கும் குழுவினர் அவதானித்துள்ளது, உடனடியாக விரைந்து வந்து பல சிரமத்திற்கு மத்தியில் மூன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மீட்டு பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வந்து, அவர்கள் தங்கி இருந்த சுற்றுலா விடுதியில் ஒப்படைத்துள்ளனர்.

மீட்கப்பட்ட சுற்றுலா பயணிகளில் 10 மற்றும் 14 வயதுடைய இரண்டு குழந்தைகளும் 44 வயதுடைய ஒரு பெண்ணும் அடங்குகின்றனர். இவர்கள் மூவரும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மீன் பாண் துண்டு தொண்டையில் சிக்கி முதியவர் ஒருவர் ஹோமாகமவில் சாவு!

கொழும்பு – ஹோமாகம, பிட்டிபன தெற்கு பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மீன் பாண் துண்டு தொண்டையில் சிக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹோமாகம, பிட்டிபன தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய முதியவர் ஆவார்.

சம்பவத்தன்று உயிரிழந்த முதியவரின் குடும்பத்தினர் காலை உணவுக்காக மீன் பாண் வாங்கியுள்ளனர்.

முதியவர் மீன் பாணை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென சுகயீனமுற்றுள்ளார்.

பின்னர் முதியவரை அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் போது அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த முதியவர் பார்கின்சன் என்ற நரம்பியல் நோயால் பாதிக்கப்பட்டவர் என்பதும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.














# புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்துக் கைதடியில் பிரதமர் தலைமையில் நடந்த கலந்துரையாடல்!

கல்விச்சீர்திருத்தம் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் எட்டாவது அமர்வு வடக்கு மாகாணத்தில் இன்று சனிக்கிழமை வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில்இலங்கைகல்விச்சீர்திருத்தஆணைக் குழுவின் ஏற்பாட்டில்

இடம்பெற்றது.

புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பிலான இந்தத் தெளிவூட்டல் கலந்துரையாடலுக்கு பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹறிணி அமர்சூரிய தலைமை வகித்தார்.

கடற்றொழில், நீரியல் வள அமைச்சர் சந்திரசேகரன், கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுபோவ, வடக்கின் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு ஆளுநர் வேதநாயகன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், கல்விப்புலம் சார் அதிகாரிகள், புத்திஜீவிகள் எனப் பலரது பிரசன்னத்துடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

2026 ஆம் ஆண்டுமுதல் நாட்டின் கல்வி முறையில் – குறிப்பாகஓ பாடசாலைக் கல்விமுறையில் – மாற்றத்தைக் கொண்டுவரும் முகமாக கல்விச் சமூகத்தின் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் வகையில் நடைபெறும் கலந்துரையாடல்களின் ஓர் அங்கமாகவே இது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.















# இன்றைய ராசி பலன்கள் -03.08.2025




இன்று உங்கள் மனதில் ஏற்படும் பதற்றத்தையும் பாதுகாப்பின்மை உணர்வையும் கட்டுப்படுத்த வேண்டும். அவநம்பிக்கை எண்ணங்களை வளர்க்காதீர்கள். இன்று சாதகமான நாளாக இருக்கும். நம்மால் சாதிக்க முடியும் என்று எண்ணுங்கள்.

உங்கள் பணிகளை ஆற்ற முடியும் என்ற உறுதி உங்களிடம் காணப்படும். இந்த உணர்வின் மூலம் தடைகளை தாண்டி செயல்படுவீர்கள்.

உங்கள் துணையை இன்று சமாதானப்படுத்துவதைக் கடினமாக உணர்வீர்கள். தேவையற்ற விஷயங்களை பேசுவதை தவிருங்கள்.

இன்று பணவரவுக்கான சாத்தியம் இல்லை. அதிக செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




இன்றைய நாள் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை முன்கூட்டியே திட்டமிட வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது ஏற்றதல்ல.

இன்று பணியில் சில தைரியமான முடிவுகள் எடுப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

எளிய விஷயங்களைக் கூட தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது இன்றைய நாளின் மகிழ்ச்சியையும் திருப்தியையும் பாதிக்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது. இன்று அதிக செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.




இன்று மகிழ்வுடன் இருப்பீர்கள். மனதில் தெளிவு இருக்கும். உங்கள் திறமைகளை அறிந்து அதனை சிறந்த தகவல் பரிமாற்ற முறையில் வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் மேலதிகாரியிடமிருந்து உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள். பணியில் உங்கள் தனித்தன்மையைக் காட்டுவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் நேரத்தை கழிப்பீர்கள். உங்கள் துணையை நண்பர்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்வீர்கள். அவரின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று உங்களிடம் அதிகப் பணம் காணப்படும். அதனை சிறப்பான முறையில் சேமிப்பீர்கள்.

இன்று முழு ஆரோக்கியம் காணப்படும். உங்கள் தேக ஆரோக்கியமும் ஆற்றலும் சிறந்து காணப்படும்.




இன்றைய நாளை ஆன்மீக ஈடுபாட்டிற்கு பயன்படுத்துங்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஒன்றே திருப்தி காண சிறந்த வழி ஆகும்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது. அதிக பணிகளை எதிர்கொள்ள நேரும். இதனால் பதற்றம் சிறிது அதிகரிக்கும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் சிறிய விஷயங்களையும் தீவிரமாக பார்ப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பிரச்சினை நிறைந்திருக்கும். அதிகரிக்கும் செலவினங்கள் கவலையை அளிக்கும். தேவையற்ற பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். நெருங்கிய நண்பர்களின் ஆலோசனை பெறுதல் நல்லது. இதன் மூலம் நட்பின் சிறப்பையும் நீங்கள் உணர முடியும்.

இன்று பதற்றம் காணப்படும். நல்ல பலனைப் பெற இன்று திறமையாக திட்டமிட வேண்டும்.

மனதில் காணப்படும் மகிழ்ச்சியின்மையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உற்சாகத்தை வெளிப்படுத்த முயலுங்கள்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். தேவையற்ற விஷயங்களுக்காக செலவு செய்ய வேண்டியிருக்கும். இது கவலையை ஏற்படுத்தும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி மற்றும் முதுகு வலி காணப்படும். ஆரோக்கியமாக இருக்க அமைதியுடன் இருக்க வேண்டும்.




இன்று காணப்படும் கடினமான சவால்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆன்மீக ஈடுபாடு வெற்றியை அளிக்கும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப்படியான பணிச்சுமை காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க நேரும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமை இழக்க நேரலாம். இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

உங்கள் தேவைகேற்ப பணம் கிடைக்க இயலாது. மருத்துவ செலவுகள் காணப்படும் இது தவிர்க்க இயலாதது.

அதிக சிந்தனை தலைவலியை ஏற்படுத்தும். எதையும் சகஜமாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருப்பது நல்லது.




இன்று முன்னேற்றகரமான நாள். உங்கள் ஆர்வங்களை மேம்படுத்தும் பல வாய்ப்புகள் கிடைக்கும். பயனுள்ள முடிவுகள் எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்தலாம்.

பணியிடத்தில் வெற்றி காண்பீர்கள். பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்கள் துணையுடன் சேர்ந்து இன்றைய நாளை சிறப்பான நாளாக கொண்டாடி மகிழ்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

உங்களின் கடின உழைப்பு காரணமாக இன்று உங்களுக்கு அதிக பண வரவு கிடைக்கும்.

இன்று துடிப்புடன் காணப்படுவீர்கள். இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வளர்ச்சி காண்பீர்கள். கடினமான செயல்கள் கூட இன்று எளிதாகச் செய்வீர்கள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று அர்ப்பணிப்புடன் பணி செய்வீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக பணிகளை திறமையாக செய்து முடிப்பீர்கள்.

இன்று நீங்கள் சம நிலையோடு இருப்பீர்கள். உங்களின் இந்த மன நிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இந்த அணுகுமுறை உறவில் நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கும்.

பிதுரார்ஜித சொத்து அல்லது கடன் மூலம் பண வரவு ஏற்படும். பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்த இந்த நாளைப் பயன்படுத்தலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் உங்கள் மனதில் நம்பிக்கை உணர்வை வளர்த்துக் கொள்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -03.08.2025




ஆன்மீக விழிப்புணர்வு இன்று உங்களுக்கு ஆறுதலையும் வளர்ச்சியையும் தரும். இன்றைய நாளை மகிழ்ச்சியாக நீங்கள் வழி தேடுவீர்கள். விரைவான முடிவுகளால் முன்னேற்றம் கிடைக்காது என்பதால் அதனைத் தவிர்க்க வேண்டும்.

உங்கள் அன்றாட பணிகளை கையாளும்போது கவனம் தேவை. பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் அகந்தைப் போக்கை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையிடம் மனம் திறந்து உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இதனால் உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்க நேரும்.

கால்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பது அவசியம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதில் முடிப்பீர்கள். உங்களுக்கான பணிகள் கடினமாக இருந்தாலும் அதனை எளிதாக முடிப்பீர்கள்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்பு உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். உங்களின் இந்த நேர்மறை அணுகுமுறை காரணமாக நீங்கள் பிறருக்கு எடுத்துக்காட்டாய் இருப்பீர்கள்.

உங்களின் கடின உழைப்பு காரணமாக உங்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் பணம் கிடைக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது. உங்களிடம் காணப்படும் நேர்மறை போக்கு உங்களை சிறந்த ஆரோக்கியத்தில் வைத்திருக்கும்.




இன்று ஆன்மீக விழா மற்றும் சொற்பொழிவுகளில் கலந்துகொண்டு திருப்தியடைவீர்கள். பிரார்த்தனையில் ஈடுபடுவீர்கள். அது உங்களுக்கு ஆறுதல் தரும்.

பணியில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் சூழ்நிலையை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். பணிகளை அதன்படி திட்டமிட வேண்டும்.

மன அழுத்தம் மற்றும் விரக்தியை உங்கள் துணையிடம் காட்டுவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இதனைத் தவிர்த்தல் நல்லது.

இன்று பண நஷ்டத்திற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டியது அவசியம்.

முதுகு வலி மற்றும் தலை வலி ஏற்படும் வாய்ப்பு உள்ளது. ஒய்வெடுப்பது அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது




இன்றைய நாள் இனிமையான நாளாக இருக்கும். இசை மற்றும் மந்திரங்கள் ஜபிப்பது மனதுக்கு ஆறுதல் மற்றும் அமைதி அளிக்கும். அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடச் சூழல் சுமுகமாகவும் திருப்தியாகவும் இருக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கப்பெறுவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்வார்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். கணிசமான வங்கியிருப்பை பராமரிப்பீர்கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். தேக ஆரோக்கியத்தை நன்கு பராமரிப்பீர்கள்.

# சத்தம் சந்தடியின்றிப் பாதுகாப்புக் குழுக்கள் பிரதேச செயலாளர் பிரிவு தோறும் அமைப்பு

(ந.லோகதயாளன்)


யாழ். மாவட்டம் உட்பட சில மாவட்டங்களில் வேறு நிர்வாக அமைப்புகளுக்கோ தரப்புகளுக்கோ தெரியப்படுத்தாமல் பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கும் வேலை சத்தம் சந்தடியின்றி – காதோடு காது வைத்தால் போல – முன்னெடுக்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது.

மாவட்டங்கள் தோறும் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக 25 பேர் கொண்ட பாதுகாப்பு குழு ஒன்றை அமைக்குமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு 2025-06-03 திகதியிடப்பட்ட கடிதம் மூலமம் – தாமதித்து – அறிவித்தல் ஒன்றை மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மாவட்டங்களில் ஏற்கனவே பிரதேச ரீதியாக உள்ள பொலிஸ் பாதுகாப்புக் குழுக்களிற்கு மேலதிகமாக இவை செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் சகல மாவட்ட அரச அதிபர்களிற்கும் முகவரியிடப்பட்டதாகக் கூறப்பட்ட போதும் பல அரச அதிபர்கள் அவ்வாறான ஒரு கடிதம் தங்களுக்குக் கிடைக்கவே இல்லை எனக் கையை விரிக்கின்றனர்.

இவ்வாறு சில மாவட்டங்களிறகு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு அமைய பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் பதவி ஆளும் தேசிய மக்கள் சகதியின் விசுவாசிகளை மட்டும் கொண்டு நிரப்பப்படுவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது.


: 011- 2050372
: 011- 2369842
: gnaddivision@gmail.com